For Private Circulation Only

India ECHOES
ONE WORLD ONE HUMANITY

நவம்பர் 2011 மலர் 4 இதழ் 6

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®







# மாஸ்டருடைய வாரிசை முன்மொழிதல்

கொல்கத்தா 3 அக்டோபர் 2011

## செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் வரவேற்கப்பட்டிருந்தவர்களிடத்தில் மாஸ்டர் ஆற்றிய உரை.

நான் முன்பே கூறியது போல், இன்று என்னுடைய வாரிசை நியமிக்க விரும்புகிறேன் - பெயர் முன்மொழிதல் மற்றும் நியமித்தல் - ஏனெனில் இப்பொழுது நான் எனது எண்பத்தைந்தாவது வயதில் இருக்கிறேன். மேலும் இந்த தருணத்தின் மதிப்பை நீங்கள் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். இது பாபூஜி மகராஜ் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டதாகும். எழுத்து மூலமாக பெயர் முன் மொழிவதற்கு மட்டுமல்லாமல், அதை இரகசியமான ஆவணமாக வைத்திருந்து, பொருத்தமான நேரத்தில் அதை பயன்படுத்துமாறும் நான் அறிவுறுத்தப்பட்டிருந்தேன். இருப்பினும், இதை வெளிப்படையாக அறிவிப்பதுதான் சரியாக இருக்கும் என நினைக்கிறேன். அப்பொழுதுதான், இந்நபர் நம்மிடத்தில் இருந்துதான் வந்தவர் என்றும், மேலும், இவர்தான் வாரிசு என்ற உண்மையை மக்கள் மெதுவாக ஜீரணித்துக் கொள்ளவும் ஏதுவாக இருக்கும். மேலும், இது நேரம் வந்ததும் உடனடியாக ஏற்பட்ட மாற்றம் அல்ல என்பதையும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். தவிர, நான் ஏற்கனவே எழுத்து மூலமாக தயாரிக்கப்பட்ட ஆவணப் பத்திரத்தை வைத்துள்ளேன். இதை இறுதியாக யாராவது படிக்குமாறு வேண்டுகிறேன்.

இத்தகைய பொறுப்புகளை எவரொருவர் தனது தோள்களில் சுமக்கிறாரோ, அவருக்கு, பெருமளவு விவேகம், அளவுக்கதிகமான பொறுமை, அளவுகடந்த அன்பு ஆகியவை நிச்சயம் தேவை. இவை எல்லாவற்றையும் விட அதிகமாக, ஏதாவது ஒன்றைச் செய்யும் முன், பெருமளவு சிந்திக்கும் திறன் தேவை. பொதுவாக நாம் "எண்ணித் துணிக கருமம்" என்றோ அல்லது, "ஒரு செயலைச் செய்யும் முன் இருமுறை யோசிக்க வேண்டும்" என்றோ கூறுவது வழக்கம். ஆனால் சகஜ மார்க்கத்தில், இருமுறை என்பதை விட மீண்டும் மீண்டும் பலமுறை சிந்திக்க வேண்டியது அவசியம் என்பதாக நான் கருதுகிறேன். மேலும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அதாவது, நாம் இதை இவ்வாறு கூறலாம்; நாம் பணத்தை செலவழிக்கும் பொழுது, நாம் மக்களின் பணத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறோம், அவர்களின் நலனுக்காக செலவழிப்பதற்காக நம்மிடம் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்டுள்ள பணத்தைச் செலவு செய்து கொண்டிருக்கிறோம் என்று உணரப்படுகிற விழிப்புணர்வு, நம்மிடம் இருக்க வேண்டும். நான் குறிப்பிடுகிற நபரிடம், ஒருவேளை இத்தகைய பண்பு நலன்கள் இல்லாதிருக்குமானால், அவர் அதை மென்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். உட்புறம் தைரியத்தையும், வெளிப்புறம் நட்புறவையும், சகோதரத்துவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும், பாபூஜி மகராஜ் அவர்களால் எனக்களிக்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் என்னால் கடைபிடிக்கப்பட்டு வந்த பாபூஜி மகராஜ் அவர்களுடைய வழிகாட்டுதல் நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். எவரையும் நம்பாதே; எவர்மீதும் அவநம்பிக்கை கொள்ளாதே. ஒரு குறிப்பிட்ட வேலைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை அவர்களுடைய செயல்களைக் கொண்டு மட்டும் மதிப்பிடுங்கள். அவர்களுடைய வேலையின் விளைவைக் கொண்டு மட்டுமே அவர்களைத் தேர்ந்தெடுப்பதா அல்லது விடுவிப்பதா என்பதை முடிவு செய்யுங்கள். எந்நிலையிலும் முன்கணிப்பு கூடாது. வகுப்பு, இனம், மதம், பால், பிரிவு, மொழி எவற்றிலும் முன்கணிப்பு கூடாது.

ஆகவே, எவரொருவர் சுமைதாங்கியாக இருக்கப்போகிறாரோ, அவர் இதனை கண்டிப்பாக நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அவருக்கு நீண்ட ஆயுள், உடல்நலம், வலிமை, நம்பிக்கை மற்றும் அவருக்கு தேவைப்படுகிற அனைத்தையும் மாஸ்டர் அளிப்பார். ஏனெனில் நான் இந்த மிஷனை அடைந்த பொழுது, இது மிகவும் சிறியதாக இருந்தது. எனக்குப் பிறகு இந்த மிஷனை என்னிடமிருந்து பெறக்கூடியவருக்கு, இது நிர்வகிப்பதற்கு மிகப்பெரியதாக, உலகளாவிய ஸ்தாபனமாக இருக்கும். பாபூஜி மகராஜ் அவர்களுடைய அருட்செய்திகள் நமது மிஷனின் முக மதிப்பாக இருப்பதனால்தான், நமது ஸ்தாபனம் இன்றும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. மேலும் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும். இது ஒரு வளரும் பருவம். எவ்வளவு தூரம் இது தொடர்ந்து வளர்ச்சியடையும் என்று எனக்குத் தெரியவில்லை. அது தெய்வீகத் திட்டத்தைப் பொறுத்தது.

ஆகவே, திரு.கமலேஷ் பட்டேல் அவர்களை என்னுடைய அடுத்த வாரிசாக நான் முன்மொழிகிறேன்.

...இந்த நேரத்தில், உலகெங்கிலும் உள்ள நமது அப்யாசி சகோதர சகோதரிகள், அவர்களது முழு ஒத்துழைப்பையும், முன்கணிப்பின்றி, எனது அடுத்த வாரிசுக்கு தருமாறு நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவர் என்னவாக இருந்து கொண்டிருக்கிறார் அல்லது அவர் என்னவாக இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்பதை வைத்து அல்லாமல், அவருடைய வேலை, அவர் என்னவாக இருக்கிறார், அவர் என்னவாக இருப்பார், அவர் என்ன செய்வார் என்பதைக் கொண்டு மதிப்பிடுங்கள். மிஷனுடைய நலத்திற்கும், அதன் வருங்கால வளர்ச்சிக்கும் இது மிகவும் இன்றியமையாததாகும். இந்த மிஷனின் மூலமாக உங்கள் அனைவருக்கும், தன்மைமாற்றத்திற்கான சேவையை வழங்குவதற்கு, உங்களின் முழுமையான, இதயப்பூர்வமான ஒத்துழைப்பை அவருக்கு கொடுக்குமாறு உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் ஆசீர்வாதங்கள்.

# மாஸ்டரின் பயணம்

## டெல்லி 16-18 ஆகஸ்ட் 2011

மாஸ்டர், சென்னையிலிருந்து டெல்லிக்கு, ஆகஸ்ட்16ம் தேதி மாலை 5:30 மணிக்கு, விமானம் மூலம், அப்யாசிகள் மகிழ்ச்சியுறும் வண்ணம் வந்தடைந்தார். அவருக்கு நூற்றுக்கணக்கான அப்யாசிகள் விமானநிலையத்தில் உற்சாக வரவேற்பளித்தனர். மாஸ்டர், பிரகாசமாகவும், உற்சாகமாகவும் காணப்பட்டார். பயணம் எப்படி இருந்தது என்ற வினாவிற்கு, சம்சாரங்களைப்போலவே பயணத்தையும் சகித்துக்கொள்ள வேண்டும் என சிரிப்புடன் குறிப்பிட்டார். மாஸ்டர், சிறிது தொலைவிலுள்ள அப்யாசியின் வீட்டிற்கு காரில் சென்றடைந்தார். பின், அங்கு குழுமியிருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். மாலை முழுவதும் மகிழ்ச்சியாக இருந்தார். இரவு உணவிற்குப்பின், பாபூஜி மகராஜின் பேத்திக்கு பெண் குழந்தை பிறந்ததை கேள்விப்பட்ட பொழுது, அவர், அதை சென்னையிலிருந்து டெல்லிக்கு பயணம் செய்த வேளையிலேயே உணர்ந்ததாக கூறினார். தன் அன்பிற்குரிய மாஸ்டரின் கொள்ளுப்பேத்திக்கு 'தேவ்யானி' எனப் பெயரிட்டார்.




அடுத்த நாள் காலை சத்சங்கம் நடத்திய பின், டெல்லியில் ஆசிரம சொத்தின் முதல்கட்ட பதிவிற்காக புறப்பட்டு சென்றார். பதிவிற்கு பின், அங்கிருந்தவர்களுடன் அளவளாவி, பிரசாதம் அளித்தார். மாலை 6:30 மணி அளவில் சத்சங்கம் நடத்தினார். இரவு உணவிற்கு பின், தனக்கே உரிய நகைச்சுவை பாணியில், TTK குழுமத்தில் தான் பணியாற்றிய நாட்களை நினைவு கூர்ந்தார். அன்பைப் போலவே நேர்மையும் ஒரு வழிப்பாதையாகும், நேர்மைக்கு பரிசு, நேர்மையாகவே இருப்பதாகும் என அவர் அப்பொழுது குறிப்பிட்டார்.

ஆகஸ்ட் 18ம் தேதி மாஸ்டர், சில அப்யாசிகளுடன் அளவளாவினார். பிற்பகல் அவர் ஹைதராபாத்திற்கு புறப்பட்டுச்சென்றார்.

## ஹைதராபாத் 18-23 ஆகஸ்ட் 2011

ஹைதராபாத் அடைந்தவுடன் மாஸ்டர், நேராக கச்சிபௌளிக்கு புறப்பட்டு சென்று, "கன்ஹா சாந்தி வன" திட்டத்திற்கு பதிவு செய்யச்சென்றார். வயதில் தன்னை விட நாலு வருடம் மூத்தவரான சகோ. ஸ்ரீனிவாசராவ் கஷாம்பூர்கரைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். மாஸ்டர் பிரிசெப்டரான பின், மிஷனில் சேர்ந்த முதல் அப்யாசி சகோ.ஸ்ரீனிவாச ராவ் கஷாம்பூர்கரே ஆவார். மாஸ்டர் அவருடன் மென்மையாக உரையாடினார். இரவு உணவிற்கு பின், குழந்தைகள் சாப்பாட்டு மேஜையை சுற்றி அமர்ந்து, மாஸ்டர் தாத்தாவுடன் நகைச்சுவையாக பேசிக்கொண்டிருந்தனர். மாஸ்டரும் அவர்களுக்கிணையாக நகைச்சுவையுடன் பதிலளித்தார்.



ஆகஸ்ட் 19 ம் தேதி, காலை சத்சங்கத்திற்குப்பின், மாஸ்டர், 'கன்ஹா' திட்ட குழுவைச் சந்தித்துப் பத்திரங்களைப் பரிசீலித்தார். காலை உணவிற்கு பின், அங்கிருந்தவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது, ஒரு சகோதரியைப் பார்த்து, அவர் முந்தின தினம் எங்கிருந்தார் என வினவ, அச்சகோதரி, தன் மன நிலை சரியில்லாததால் வரவில்லை எனக்கூறினார். அதற்கு மாஸ்டர், 'என் மீது கோபமா' என வினவினார். ஒருவர் தன் கணவன் மீதோ, மனைவி மீதோ, அல்லது, புதல்வன், புதல்வி மீதோ கோபப்படமுடியாது, ஆனால் மாஸ்டர் மீது கோபப்பட முடியும் ஏனெனில் அங்கு தான் எதிர் விளைவு இருக்காது என பாபூஜி மகராஜ் கூறியதாக மாஸ்டர் குறிப்பிட்டார்.

ஆகஸ்ட் 20ம் தேதி, காலை உணவிற்கு பின் மாஸ்டர், "கன்ஹா சாந்தி" வனத்திற்கு புறப்பட்டுச்சென்றார். நிலம் முழுவதுமாக சரி செய்யப்பட்டு, வேலியும் அமைக்கப்பட்டு, பப்பாளி, சோளம் மற்றும் நெல்லும் பயிரிடப்பட்டிருந்தன. ஒரு மரத்தை சுற்றி சிறு குடிலும் அமைக்கப்பட்டிருந்தது. மாஸ்டர் வெளியில் அமர்ந்து நிலத்தின் வரைபடத்தை பார்வையிட்டார். மாஸ்டர் அங்கு, முதல் சத்சங்கம் நடத்தினார். அப்பொழுதிலிருந்தே, ஒவ்வொரு ஞாயிறன்றும் அங்கு சத்சங்கம் நடத்த அனுமதி அளித்தார். நிலத்தை சுற்றிப்பார்த்தபின், அதன் பராமரிப்பு குறித்து புகழ்ச்சி தெரிவித்தார். பின் அவர், மதிய உணவிற்காகவும், ஓய்விற்காகவும் சகோ. மது கொத்தபள்ளியின் இல்லத்திற்கு திரும்பிச்சென்றார்.

மாஸ்டர், ஆசிரமம் செல்ல மிகத்தவிப்புடன் காணப்பட்டார். மாலை 3:30 மணிக்கு புறப்பட்டு, மண்டல ஆசிரமத்திற்கு சுமார் 6 மணி அளவில் வந்தடைந்தார். சுமார் 4000 அப்யாசிகள் அவரை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஒழுங்கு முறையை பற்றி வினவ, உங்களுக்கு இந்நிலை வருவதிற்கு மிகுந்த கால அவகாசம் ஆயிற்று என சிரிப்புடன் குறிப்பிட்டார். மாஸ்டர் மேடை ஏறும் பொழுது, குழந்தைகள் ஆரவாரமாக வாழ்த்து தெரிவித்தனர். மாஸ்டர் அவர்களை திரும்பிப்பார்த்து, சகஜமார்க்கம் மௌனத்தை போதிக்கிறது என்பதை நினைவில் கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

ஆகஸ்ட் 21ம் தேதியன்று, தியான அரங்கம் நிரம்பி வழிய, மாஸ்டர், காலையும், மாலையும் சத்சங்கம் நடத்தினார். மாலை கலை நிகழ்ச்சியில் குழந்தைகள் கதக் நடனம் ஆடினார்கள்.

ஆகஸ்ட் 22ம் தேதி காலை7.30மணிக்கு, பஜனுக்குப் பின்னர் மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். பிரார்த்தனை செய்ய சரியான வழிமுறை எது என ஒரு சகோதரி கேட்டதற்கு மாஸ்டர், "யாருக்காக பிரார்த்தனை செய்கின்றீர்களோ அவரை, உங்கள் கைகளில் ஒரு குழந்தையினை வைத்திருப்பது போன்று வைத்திருந்து, மாஸ்டரின் முன்பாக வைத்து





'இவரை கவனித்துக் கொள்ளுங்கள்' எனக்கூறுங்கள். இம்முறையில்தான் சகஜ மார்க்கத்தில் நாம் பிரார்த்தனை செய்கிறோம்" என பதில் அளித்தார். சகோதரி சௌம்யாவின் நடன நிகழ்ச்சியினைத் தொடர்ந்து மாலை சத்சங்கம் நடைபெற்றது.

23ம் தேதியன்று மாஸ்டர், விமான நிலையம் புறப்பட்டுச் சென்றார். அப்போது ஒரு அப்யாசி, பதிவு செய்வதற்காக மட்டுமே பயணம் செய்வது உண்மையிலேயே தேவையானதா எனவும், அதற்காக யாராவது ஒருவருக்கு அங்கீகாரம் வழங்கி விடலாமே என்றும் கேட்டதற்கு மாஸ்டர், அனைவரையும் பார்க்கவிரும்பியதால் அங்கு வந்ததாகக் கூறினார்.

## டெல்லி 23-30 ஆகஸ்ட் 2011

மாஸ்டர் 23ம் தேதி மாலை டெல்லி திரும்பினார். விமான நிலையத்தில் அப்யாசிகள் அவரை மிக்க உற்சாகத்துடன் வரவேற்றனர். எப்போதும் போலவே அங்கு மகிழ்ச்சியான சூழல் நிலவியது. மாஸ்டரின் முன்பாக, நேரம் ஆவதே உணராத நிலையில், நாட்கள் வெகு வேகமாக கழிந்தன. மாஸ்டர் களைப்பேதுமில்லாமல் அலுவலகத்தில் பணி செய்வதையும், அப்யாசிகளிடம் உரையாடுவதையும், சத்சங்கங்கள் நடத்தியதையும், ஆன்மீக செல்வங்களான அவருடைய மாஸ்டரின் போதனைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வதையும், அருள் மழை பொழிவதையும் அங்கிருந்தவர்கள் கண்டார்கள்.

ஆகஸ்ட் 27ம் தேதி, மாஸ்டர் குர்காவ் ஆசிரமத்திற்குப் புறப்பட்டார். மறு நாள் காலை, அதிக எண்ணிக்கையில் குழுமி இருந்த அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். பிறகு அவர், அப்யாசிகளை சந்திப்பதில் நேரத்தினை செலவழித்தார். ஆறு குழந்தைகளுக்குப் பெயர் சூட்டினார். அன்றைய தின முடிவில் நகரத்திற்குத் திரும்பினார்.

ஆகஸ்ட் 29ம் தேதி, மாஸ்டர், புது டெல்லி புதிய ஆசிரமத்தின் இரண்டாம் கட்ட பதிவிற்காகச் சென்றார். அவருடைய மாஸ்டரின் பணியில் அவர்காட்டிய மகிழ்ச்சியினையும், உற்சாகத்தினையும் மிகவும் தெளிவாக காண முடிந்தது. வீடு திரும்பிய பின்னர், ஒரு சகோதரர், பதிவு செய்யும் வேலை முடிந்ததால் அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததாக குறிப்பிட்ட போது மாஸ்டர், புன்னகை செய்தவாறு பதில் அளித்தார். " இது எதிர் காலத்திற்கானது. ஆனால் நிகழ் காலத்தில் நான் செய்ய வேண்டியது மிகவும் அதிகமாக உள்ளது" என்றார். உடன் அங்கு குழுமி இருந்தவர்களுக்கு சத்சங்கம் நடத்தினார்.

## சென்னை- ஆகஸ்ட் 30 - செப்டம்பர் 30 வரை

மாஸ்டர் டெல்லியில் இருந்து ஆகஸ்ட் 30 ம் தேதி சென்னை வந்தார். 31ம் தேதி குடிலில் குழுமி இருந்தவர்களுக்கு சத்சங்கம் நடத்தினார். சத்சங்கம் முடிந்தவுடன், ஒரு அப்யாசி தம்பதியினர், அன்று ரம்ஜானாக இருப்பதால் தங்களுக்கு சிட்டிங் அளிக்குமாறு கேட்டனர். தான் அப்போதுதான் சிட்டிங் கொடுத்ததாகவும், மிகவும் களைப்பாக உள்ளதாகவும் மாஸ்டர் கூறினார். சிறிது இடைவெளிக்குப்பின்னர் மாஸ்டர், தான் அவர்களுக்கு ஐந்து நிமிடத்தில் சிட்டிங் அளிப்பதாக கூறினார். தன் சொந்த அசவுகரியத்தினையும் பொருட்படுத்தாமல், மற்றவர்களின் வேண்டுகோள்களுக்கு மாஸ்டர் எவ்வாறு செவிசாய்க்கின்றார் என்பதனை இச்செயல் வெளிக்காட்டியது.

செப்டம்பர் மாதம் முழுவதும் மாஸ்டர் சென்னையில் இருந்தார். பெரும்பாலும் மணப்பாக்கத்தில் தங்கியிருந்தார். அவருடைய படுக்கை அறையில் இருந்து, குடிலுக்குப் பின்புறம் ஒரு சிறிய நடைப் பயிற்சியினை செய்துவிட்டு, குடிலுக்கு முன்புறம் வந்து அமர்ந்துகொள்வதை தினசரி வழக்கமாக கொண்டு இருந்தார். செப்டம்பர் 16ம் தேதி காலை 7 மணிக்கு, மாஸ்டர் புதிய நூலகத்தினைத் திறந்து வைத்தார். அது பயன்படுத்திக்கொள்ளத் தயார் நிலையில் இருந்தது. மேலும், நூலக தன்னார்வத் தொண்டர்களுக்கு பிரசாதத்தினை வழங்கினார். செப்டம்பர் 25ம்தேதி, கார்டன் ஆப் ஹார்ட்டில் வசிக்கும் அப்யாசிகள், மாஸ்டரை, கட்டிடத்தின் அடித்தளத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, இரவு விருந்துக்கு அழைத்தனர். அங்கு குழுமியிருந்த அப்யாசிகளிடம் மாஸ்டர் உரை நிகழ்த்தினார். பெற்றோர்களுக்கான அவ்வுரையில், குழந்தைகளை எவ்வாறு வளர்க்கவேண்டும் என்பதுதான் முக்கிய கருத்தாக இருந்தது. இவ்வுரை, விரைவிலேயே நமது மிஷனின் இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளது.





## கொல்கத்தா - 2011 செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 8 வரை

செப்டம்பர் 30 ம் தேதியன்று, மாலை 3.40 மணிக்கு மாஸ்டர் கொல்கத்தா வந்தார். கடந்த ஒன்றரை வருடங்களாக, அவரை எதிர்பார்த்து காத்திருந்த அனைத்து அப்யாசிகளாலும், கனிவுடனும், அன்புடனும் வரவேற்கப்பட்டார். அக்டோபர் 3ம் தேதி, ஏறத்தாழ 1500 அப்யாசிகள் ஒன்று கூடியிருந்தனர். அக்டோபர் 1 மற்றும் 2ம் தேதிகளில், காலை சத்சங்கத்தை நடத்தினார்.

அவரது வருகையையொட்டி, GST பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கான கருத்தரங்கொன்று, கிழக்கு பகுதிக்காக நடத்தப்பெற்றது. அக்டோபர் 1 மற்றும் 2ம் தேதிகளில் நடந்த இக்கருத்தரங்கில், CiC, ZiC மற்றும் சில பிரிபெக்ட்கள் கலந்து கொண்டனர். GSTயின் வெவ்வேறு செயல்பாடுகளின் தலைவர்கள், அவர்களது செயல்பாடுகள் குறித்த விவரத் தொகுப்பை, கலந்து கொண்டவர்களுக்கு கூறினர்.

அக்டோபர் 2ம் நாள் மாலை, குழந்தைகள் கவ்வாலி நிகழ்ச்சி ஒன்றையும், சகோதரிகள் கர்பா நடனத்தையும் நிகழ்த்தினர். நிகழ்ச்சியை கண்டு மகிழ்ந்ததுடன், குழு புகைப்படம் எடுப்பதற்கும் மாஸ்டர் ஒப்புக் கொண்டார். இரவு உணவை அப்யாசிகளுடன் உட்கொள்ள, உண்ணும் அறைக்கு அழைத்த சமையலறை குழுவின் அழைப்பையும், அவர் ஏற்றுக் கொண்டார். அங்கிருந்த அனைத்து அப்யாசிகளுக்கும், களிப்பூட்டத்தக்க, நினைவு கூறும் மாலைப் பொழுதாக அமைந்தது.

3 ம் தேதி காலை, நிர்வாகக் குழுவின் செயல்பாடுகள் குறித்து, மாஸ்டர் ஒரு கூட்டத்தை தானே நடத்தினார். அக்கூட்டம் முடிந்த பின், சகோ. கமலேஷ் D. படேல், தன் வாழ்நாளிற்கு பின், தன் ஆன்மீக வாரிசாகவும், மிஷனின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார், என்று அவர் தெரிவித்தார். பின் அதனை ஒலி-ஒளி செய்தியாக பதிவு செய்து, அனைத்து மையங்கள் மற்றும் உலகமெங்கிலும் உள்ள அப்யாசிகளுக்கு உடனடியாக காண்பிக்க கூறினார். மாலையில், மாஸ்டர் 5.00 மணிக்கு சத்சங்கம் நடத்தி, பின் அங்கிருந்த அப்யாசிகளுக்கு, சகோ. கமலேஷ் படேலை அறிமுகப்படுத்தி, அவர் நியமிக்கப்பட்டுள்ளதை அறிவித்தார்.

5ம் தேதி மாஸ்டர், சகோ. அஜய் பட்டர் இல்லத்திற்கு சென்றிருந்தமையால், சகோ. கமலேஷ் படேல் காலை சத்சங்கத்தை நடத்தி, பின் பயிற்சிமுறையின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினார். அங்கு மாஸ்டர், அக்டோபர் 8ம் தேதி வரை தங்கிவிட்டு, பின் கௌஹாத்தி சென்றார்.



## கௌஹாத்தி - 8-10 அக்டோபர் வரை

பதினெட்டு ஆண்டுகள் இடைவெளிக்கு பின் மாஸ்டர், வடகிழக்கு இந்தியாவிலுள்ள, கௌஹாத்திக்கு வந்திருந்தது, வெகு நாளாக காத்திருந்து அமைந்த நாளாகும். நகரத்திலிருந்து 25 கி.மீ தொலைவில் அமைந்துள்ள, பசுமை நிறைந்த மலைக்குன்றுகள் சூழ்ந்திருக்கும், மண்டல ஆசிரம நிலத்தில், மாஸ்டர் 9ம் தேதியை கழித்தார். பாரம்பரியமிக்க பிஹு நடனம் மூலம், மாஸ்டர் வரவேற்கப்பட்டார்.

சத்சங்கத்திற்கு பின், வடகிழக்கு இந்தியாவைச் சேர்ந்த ஏழு மாநிலங்களும், தனது பாரம்பரிய முறைப்படி மாஸ்டரை வரவேற்றன. அவரது உரையில், ஏழின் அழகை, இசையின் ஏழு ஸ்வரங்களுடன் ஒப்பிட்டு, முக்கியத்துவப்படுத்திக் கூறினார். ஒரே ஒரு ஸ்வரம் மட்டும் இசையாக முடியாது. ஏழு ஸ்வரங்களில் ஒவ்வொன்றும் முக்கியத்துவம் வாய்ந்தது, என்று அவர் கூறினார். வெவ்வேறு மாநிலம், கலாச்சாரம் மற்றும் மொழிகளினால் நாம் வேறுபட்டு இருந்தாலும், நமது லட்சியம் ஒன்றே. ஆகையால் நம் அனைவரிடமும் ஒன்றிணைதல் என்ற உணர்வு இருக்க வேண்டும்.

சத்சங்கத்திற்கு பின், மாஸ்டர், பதிவு சம்பந்தப்பட்ட செயல்பாடுகளில் ஈடுபட்டார். மாலை சத்சங்கத்திற்கு பின், மண்டல ஆசிரமத்திற்கு 'ஜோதி' எனப் பெயரிட்டு, ஒவ்வொரு ஞாயிறன்றும் அங்கு சத்சங்கம் நடத்த உத்தரவிட்டார்.

10ம் தேதியன்று, கௌஹாத்தி நகர ஆசிரமத்தின் தியான மண்டபத்தை, மாஸ்டர் திறந்து வைத்தார். சத்சங்கத்தை நடத்திய பின், கூடியிருந்தவர்களுக்கு நிகழ்த்திய உரையில், "பயிற்சி, ஒரு வாழும் முறை. வாழ்வின் சுவாசம் போன்றது. நாம் உயிர் வாழ உடலிற்கு உணவு எப்படி அவசியமோ, அது போல் ஆன்மீக உடலிற்கு பிராணாஹுதி உணவாகும். இந்த ஆன்மீக உடலை பாதுகாக்கவில்லையெனில், ஆன்மா இறந்து விடும்." என்று கூறினார்.



நவம்பர் 2011 மலர் 4 இதழ் 6
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



## டெல்லி 10-13 அக்டோபர் 2011

மாஸ்டர், அக்டோபர் 10ம் தேதி, விமானம் மூலமாக, கௌஹாத்தியிலிருந்து புறப்பட்டு, மாலை 7:30 மணிக்கு டெல்லி வந்தடைந்தபோது, சுமார் 100 அப்யாசிகள் வரவேற்றனர். மாஸ்டர், புத்துணர்வுடனும், உற்சாகமாகவும் அங்கிருந்தவர்களை வாழ்த்தினார். ஒரு அப்யாசி சகோதரரின் இல்லத்தில் இரவு உணவுக்குப்பின், தன் வழக்கமான புத்தியும் விவேகமும் நிறைந்த பேச்சுக்களால் அனைவரையும் மெய்மறந்து மகிழ்ச்சி கொள்ளவைத்தார்.


மறுநாள், மாலை சுமார் 4 மணிக்கு, குர்காவ் ஆசிரமத்தை அடைந்தார். அங்கு சென்றவுடன், அங்கிருந்த அனைவருடனும், புல்வெளியில் அமர்ந்து, அரைமணிநேரத்திற்கும் மேலாக அன்புடன் உரையாடினார். அப்புல்வெளியில் இருந்த ஒரு சிலையைப் பற்றிக்கேட்டபோது, அச்சிலை 'துரோணாச்சாரியாரின்' சிலை என்றும், 'குர்காவ்' என்பது, முதலில் குரு கிராம்' என்பதிலிருந்து பெறப்பட்டதால், இங்கு அச்சிலை நிறுவப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். ('குருகிராம்' என்பது துரோணாச்சாரியாரின் கிராமம் என்று புராணங்களில் உள்ளது) உரையாடலின்போது, சகோ. கம்லேஷ் பட்டேலைத் தன் பரிந்துரைக்கப்பட்ட வாரிசாக அன்புடன் அறிமுகப்படுத்தினார். அதன்பிறகு சத்சங்கம் நடத்தினார்.

அக்டோபர் 12ம் தேதி, காலை 7மணிக்கு, மாஸ்டர் தியானக்கூடத்தை வந்தடைத்தார். அப்யாசிகள் இன்னும் வந்து கொண்டு இருந்ததால், அவர்களுக்காகக் காத்திருக்கும் சமயத்தில் ஒரு சிறிய உரை நிகழ்த்தமுடிவு செய்தார். சரியான முறை மற்றும் மனப்பாங்குடன் பயிற்சி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், சகோ. கம்லேஷ் பட்டேலை அறிமுகம் செய்து, தன் உரையை முடித்தார். சத்சங்கத்திற்குப் பின், மாஸ்டர் இருதிருமணங்களை நடத்திவைத்து ஆசீர்வதித்தார். அக்டோபர் 13ம் தேதி, அதிகாலையிலேயே தயாரானார். அங்கு கூடியிருந்தவர்களுக்கு, காலை 6.30 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். காலை உணவுக்குப்பின், சுமார் 8மணிக்கு விமான நிலையத்திற்குச் சென்றார்.

## துபாய்

மாஸ்டர், மதியம் 1.15மணிக்கு துபாய் வந்தார். 2.30மணியளவில் சகோ. சஞ்சய் மெஹரிஷ் இல்லத்தை அடைந்தார். மிகவும் உற்சாகமாக இருந்த மாஸ்டருடன், டெல்லி அப்யாசிகள் பலரும் வந்திருந்தனர். உலகின் பல்வேறு இடங்களிலிருந்து, இன்னும் பல நூறுபேர்கள் கலந்து கொண்டனர். 14தேதிக்குள் UAE, குவைத், இரான், பஹ்ரைன், ஓமன், பாகிஸ்தான், இந்தியா, ஆப்பிரிக்கா உள்ளடங்கிய 25 நாடுகளிலிருந்து, சுமார் 1050 அப்யாசிகள் அங்கு இருந்தனர்.

'மாற்றத்திற்காகப் பிரார்த்தனை செய்யுங்கள் - அந்த மாற்றமாக இருங்கள்' என்ற கருத்தரங்கை, 14ம் தேதி, காலை ஒரு சத்சங்கத்துடன் மாஸ்டர் துவக்கி வைத்தார். அதன்பின் அவர், சகோ. கம்லேஷ் பட்டேலை அறிமுகம் செய்து வைத்தார்.



15 தேதி காலை சத்சங்கத்திற்குப்பின், பிரிபெக்ட்களின் கூட்டத்தில், உலக சேவைக் குழுவை (GST) மாஸ்டர் அறிமுகம் செய்துவைத்தார். பாபுஜி காலத்தில் இருந்த, மிஷனின் சிறிய எளிய நிறுவனக் கட்டமைப்பானது இப்போது வளர்ச்சியடைந்து உள்ளதை அவர் விவரித்தார்.

...."உங்களுக்கான, எனது ஒரேகடமை, விளக்கேற்றுவதைப் போலாகும். அதை தொடர்ந்து எரியவைப்பதும், அதற்கு எண்ணெய் அல்லது வேறொன்றோ ஊற்றுவதும், திரியை ஒழுங்கு செய்வதும் உங்கள் வேலையாகும். இன்று மட்டுமில்லாமல், எதிர்காலத்திலும் நூறு சதவிதம் ஒத்துழைக்கும்படி உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், நமது சேவைக்குழு- அதனால் தான் அவர்கள் உலகளாவிய சேவைக்குழு என்று அழைக்கப்படுகிறார்கள்- அவர்கள் இங்கே உங்களுக்கு எதுவும் சொல்வதற்காக இல்லை, உங்களுக்குக் கற்பிக்க அவர்கள் இங்கே இல்லை, உங்களுக்கு ஏதாவது பிரச்சனைகள் இருந்தால், உங்களுடன் பரிமாற்றம் செய்து கொள்ள அவர்கள் இங்கே இருக்கிறார்கள். எவ்வாறு தீர்ப்பது, என்ன செய்வது, இந்தியாவில் என் அனுபவம் என்ன, இரானில் எங்கள் அனுபவம் என்ன, டிம்பக்டுவில் எங்கள் அனுபவம் என்ன, போன்றபல. எனவே, நம் பணிகளையும், அப்பணிகளின் மூலம் பெறப்படும் நம் அனுபவங்களையும் பரிமாற்றம் செய்து கொள்வது, மேலும் அனைத்தையும் மேம்படுத்த எதிர்காலத்தில் நாம் என்ன செய்யமுடியும் என, இங்கே இது ஒரு முழுமையான பரிமாற்ற வசதியாகும்.'

மாஸ்டர், இரான் மற்றும் UAE மையங்களின் அப்யாசிகளைச் சந்தித்தார். அவர்களுடன் நடந்த உரையாடலின் போது அவர், தேவைப்படுவது மற்றும் அன்பு செலுத்துவது ஆசியவற்றுக்கிடையே மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. எனக்கு ஒரு மாஸ்டர் வேண்டும். எதற்காக? இப்போது, நான் மாஸ்டரிம் அன்பு செலுத்துகிறேன், எனவேநான் கீழ்ப்படிகிறேன். எனவே, சகஜமார்க்கத்தில், கீழ்ப்படிதல் என்பது, பத்துக்கட்டளைகள்போல், விதிகளிலிருந்து வருவது இல்லை, நாம் நேசிக்கிறோம், எனவே நாம் கீழ்ப்படிகின்றோம், கீழ்ப்படிதல் இதயத்திலிருந்து வருகிறது, மனதிலிருந்தோ அல்லது பயத்தாலோ அல்ல, ஆனால் அன்பிலிருந்து வருகிறது". என்று கூறினார்.

மாஸ்டர், அக்டோபர் 22ந் தேதி, மும்பைக்குச் சென்றார். அங்கிருந்து, அக்டோபர் 25 ம் தேதி, அகமதாபாத்திற்குச் சென்றார்.

## முழு நாள் நிகழ்ச்சிகள்




### விருதுநகர் தமிழ்நாடு:

பிராந்திய ஒருங்கிணைப்பாளர் சகோதரர். என்.பிரகாஷ் மற்றும் மண்டல பொறுப்பாளர் சகோதரர் டி.வி விஸ்வநாதராவ் ஆகியோர், விருதுநகரில் உள்ள சின்னவல்லிக்குளம் ஆசிரமத்திற்கு ஆகஸ்ட் 21 ஆம் தேதியன்று வருகை புரிந்தனர். விருதுநகர், சின்னவல்லிக்குளம், அருப்புக்கோட்டை, காரியாப்பட்டி,கோவில்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் மற்றும் சிவகாசி மையத்தை சேர்ந்த, ஏறக்குறைய 50 சகோதர-சகோதரிகள் முழு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

காலை சத்சங்கத்திற்கு பிறகு, சகோ.என்.பிரகாஷ் உற்சாகமூட்டும் சொற்பொழிவாற்றினார். பிரஞ்சிற்கு (brunch) பிறகு 'அப்யாசியின் மேம்பட்ட பண்பு' என்ற தலைப்பின் மீது நடைபெற்ற குழு கலந்துரையாடல், பல கருத்துகளை வெளிக்கொணர்ந்தது. மாஸ்டரின் பிரசன்னத்தையும், மேலும் அவரது உறுதுணையையும் பல நேரங்களில் அப்யாசிகள் உணர்ந்ததாக வலியுறுத்தினர். முழு நாள் நிகழ்ச்சி, மாலை சத்சங்கத்திற்கு பிறகு நிறைவுபெற்றது.

### கௌஹாத்தி

இளைஞர்களின் அயராத முயற்சிகளுக்கு பிறகு, கௌஹாத்தி மையம், செப்டம்பர் 3ஆம் தேதி அன்று, நிகழ்வுகள் நிறைந்த நாளாக காணப்பட்டது. காலை சத்சங்கத்தின் தொடர்ச்சியாக, எக்கோஸ் ஆப் இந்தியா செப்டம்பர் இதழில் உள்ள மேற்கோள்கள், கணிணிவழி உதவிப்படத் தொகுப்புரை மூலம் ஒளிபரப்பட்டது. பிரஞ்சிற்கு பிறகு, புது அப்யாசிகளின் பயிற்சி செய்தல் பற்றிய சந்தேகங்களை விளக்க, ஒரு பகுதி நடைபெற்றது. பழைய அப்யாசிகளுக்கும், அவர்களின் தின அப்யாசத்தை பற்றி, பல விளக்கங்கள் தேவைப்பட்டதை காண முடிந்தது. அது மிகவும் சிந்தனையைத் தூண்டும் நிகழ்ச்சியாக, SMSF ஆல் தயாரிக்கப்பட்ட திரைதொகுப்பின் உதவியுடன் நடத்தப்பட்டது. மேலும் அதனால், அனைவரும் பயன்பட்டதை உணரமுடிந்தது. சூழ்நிலையை மென்மையாக்க, இடைவேளைக்கு பிறகு, கேள்வி-பதில் பகுதி, அனைத்து அப்யாசிகளின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து சிற்றுண்டி அளிக்கப்பட்டு, அதன் பின் மாலை சத்சங்கம் 4 மணிக்கு நடைபெற்றது.



### திருச்சூர்:

ஓணம் விழாவையொட்டி, திருச்சூர் யோகாசிரமத்தில் செப்டம்பர் 4அன்று, முழு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மாஸ்டரின் சொற்பொழிவுகளான, "இதயத்தின் நிரந்தர ஒளி" மற்றும் "மனிதகுலத்திற்காக எதிர்காலத்தை மாற்றுதல்" ஆகியவை ஒலிபரப்பப்பட்டன. மையப்பொறுப்பாளர்களான சகோ.தி.பி.நாராயணன் மற்றும் சகோ.ஜெயபிரகாஷ், அதன் பொருளை மலையாளாத்தில் மொழிபெயர்த்தனர். அண்மையில் ஏற்படுத்தப்பட்ட உலக சேவை குழு, மிஷன் நடவடிக்கைகள், சத்கோலுக்கு வருகை புரிவதன் முக்கியத்துவம், மற்றும் கிரெஸ்ட், ரிடிரிட் மையங்கள் ஆகியவை பற்றிய தகவல்கள், அனைவருடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. பொன்னான அமைதி, அரை மணி நேரத்திற்கு மேற்கொள்ளபட்டது.

### தேவக்கோட்டை, தமிழ்நாடு:



தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மையங்களை சேர்ந்த 81 அப்யாசிகள், குறிப்பாக ராமநாதபுரம், பரமக்குடி, மானாமதுரை மற்றும் சிவகங்கை மையங்களில் இருந்து, தேவக்கோட்டை மையத்தில் நடைபெற்ற முழு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சி காலை 10.00மணிக்கு, வரவேற்பு கூட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. சகோ.எச். மரியாசெல்வராஜ், வரவேற்புரை ஆற்றினார். ஏறக்குறைய 55 உள்ளூர் மக்கள் பங்கேற்றனர். மேலும் அவர்களுக்கு, மிஷனின் நடவடிக்கைகள் பற்றி விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரிபெக்ட்கள், 'மானுட பிறப்பிற்கான காரணம்', 'மதம்', 'மாஸ்டரின் பங்கு', 'பயிற்சியின் முக்கியத்துவம்', அப்யாசியின் பங்கு', மேலும் 'சகஜ மார்க்க தியானத்தின் அவசியம்' ஆகிய தலைப்புகளில் உரையாற்றினர். பிற்பகல் நிகழ்ச்சியில், அப்யாசிகள் தங்களின் அனுபவங்களை அவர்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். நிகழ்ச்சி மாலை சத்சங்கத்துடன் நிறைவுபெற்றது.



## சேவை மூலம் முன்னேற்றம் - மும்பை

சேவை மூலம் முன்னேற்றம் என்ற பணிமுகாம், மும்பையின் பல்வேறு இடங்களில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாத வார இறுதி நாட்களில் காலை பத்து மணி முதல் மாலை நாலரை மணி வரை நடத்தபட்டது. தோராயமாக, 20 அப்யாசிகள் கலந்துகொண்டனர். அப்யாசிகளுக்கு ஊக்கமளித்தல், மிஷனின் தன்னார்வ தொண்டு விஷயங்களை பகர்ந்து கொள்ளுதல், சேவை செய்வதற்கு சரியான மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுதல் மற்றும் அதற்கான வழிமுறைகள் ஆகியவை நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

செப்டம்பர் 11-ம் தேதி ஜல்குவானில் நடந்த நிகழ்ச்சியில் ஜல்குவான் மற்றும் அருகாமை மையங்களில் இருந்து 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். விளக்க காட்சிகள் ஆங்கிலத்தில் இருந்தன. அவற்றை அப்யாசிகள் ஹிந்தியிலும் மராத்தியிலும் ஒரே நேரத்தில் விளக்கினர். அப்யாசிகள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.

## சர்வதேச அமைதி நாள், குஜராத்

சர்வதேச அமைதி நாளான செப்டம்பர் 21-ம் தேதி, குஜராத்தில் 29 இடங்களில் பிரார்த்தனை கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதில் 525 அப்யாசிகளும், 1600 விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

ஜாம்நகரில் இந்த கூட்டம் நடத்தப்பட்ட நான்கு இடங்களில், 400 விருந்தினர்களும், அப்யாசிகளும் கலந்து கொண்டனர். பாவ்நகர் கூட்டத்தில், ஏறத்தாழ 200 விருந்தினர்களும், அப்யாசிகளும், போர்பந்தரில் 50 பேர்களும் கலந்து கொண்டனர். காதியில் இந்த கூட்டம், ஒரு பள்ளிகூடத்தில் நடத்தப்பட்டது. அங்கே 225 விருந்தினர்களும், அப்யாசிகளும் கலந்து கொண்டனர். அவர்களில் 60 பேர், பூஜ் மையத்திலும், ராஜ்கோட்டிலும் பங்கேற்றனர். அழைப்பிதழ்கள் வடிவமைத்தல், விளம்பர திரைசீலைகள், காட்சி பொருட்கள் ஆகியவை 15 நாட்களுக்கு முன்னரே தயார் செய்யப்பட்டன. அழைப்பிதழ்கள், அப்யாசி குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. கலந்து கொண்ட எல்லோரின் பயனையும் கருத்தில் கொண்டு, உலகளாவிய பிரார்த்தனை, குஜராத்தி மொழியில் காட்சிக்கு வைக்கப்பட்டது. இது, பிரார்த்தனையை மனப்பாடம் செய்வதற்கு உதவியாய் இருந்தது.



## மனோஉறுதியை பயன்படுத்துதல், மும்பை

மனோஉறுதியைப் பயன்டுத்துவதின் தொடர்பாக, கூட்டத்தொடர் ஒன்று, மும்பை மையத்தில் செப்டம்பர் 4-ம் தேதியன்று நடத்தப்பட்டது. இதில் 55 அப்யாசிகள் கலந்துகொண்டனர். இந்த கூட்டத்தொடர், வரவேற்புடையுடனும், அதை தொடர்ந்து மாஸ்டரை பற்றிய பாடல் மற்றும் துவக்க உரையுடனும் ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கிலம் மற்றும் இந்தியில் மாஸ்டர் உரையாற்றிய, மனோ உறுதி குறித்த ஒலியும், ஒளியும் நிகழ்ச்சி இருந்தது. அதே தலைப்பில் சகஜ மார்க்கத்தில் இருந்து குறிப்புகள் வழங்கப்பட்டன. அப்யாசிகள், தங்கள் பயிற்சியை முன்னிலும் அதிக உற்சாகத்துடன் செய்யும் தீர்மானத்துடன், நிகழ்ச்சி நிறைவடைந்தது.

## பத்து நியமங்கள், கடக், வட கர்நாடகா

கர்நாடகாவின், ஹுப்ளி அருகிலுள்ள, கடக்கில் பத்து நியமங்கள் குறித்த முழுநாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் 53 அப்யாசிகள் பங்கேற்றனர். காலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி ஆரம்பித்தது. பத்து நியமங்களின் அடிப்படையில், சமநிலை வாழ்க்கை நடத்துவதனால் ஏற்படும் குண உருவாக்கத்தின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது. மாஸ்டரின் வாழ்க்கையில் இருந்து எடுத்துகாட்டி, ஒவ்வொரு நியமமும் விளக்கப்பட்டது. மதிய உணவிற்க்குப்பின், குழந்தைகள் ஒரு பாடல் பாடினார்கள். சில கைவேலைப்பாடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.



நவம்பர் 2011 மலர் 4 இதழ் 6
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



## ராஜஸ்தான் - இளைஞர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

4 செப்டம்பர் அன்று, ஜெய்ப்பூரில், ராஜஸ்தான் மண்டல இளைய அப்யாசிகளுக்கு, ஒரு விழிப்புணர்வு பணிமுகாம் நடத்தப்பட்டது. பல்வேறு மையங்களை சேர்ந்த சுமார் 70 இளைஞர்கள் பங்கேற்றனர். பரிந்துரைக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளர்கள், கீழ்கண்ட தலைப்புகளில் கருத்துரை வழங்கினர். தலைப்புகள் பின்வருமாறு:

- சகஜ மார்க்கம் பற்றிய சரியான புரிந்துணர்தல் என்ன? மற்றும் அதை இளைஞர்களுக்காக எவ்வாறு மேம்படுத்துவது?
- உங்கள் மையத்தின் இளைஞர் ஒருங்கிணைப்பாளராக, நீங்கள் நடத்திக் கொண்டிருக்கும் இளைஞர்கள் தொடர்பான செயல்கள் என்ன?
- சகஜ மார்க்க இணையதளத்தின் மூலம் கிடைக்கும் பயன்கள் என்ன?
- CREST கரக்பூர் மற்றும் பெங்களூர் இளைஞர் கருத்தரங்கு பற்றிய விழிப்புணர்வு

இந்த பணிமுகாமின் முக்கிய நோக்கம் யாதெனில், பல்வேறு மையங்களைச் சேர்ந்த இளைய தலைமுறையினர் அனைவரையும், ஒரு பொதுவான இடத்தில் ஒன்றுபடச் செய்து, அவர்களுக்கு, கருத்துகளை பரிமாறக் கொள்ளவும், தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்திக் கொள்ளவும், மேலும், சகோதரத்துவ உணர்வை வளர்த்துக் கொள்ளவும், ஒரு வாய்ப்பளிப்பதாகும். இங்கு பின்பற்றப்பட்ட வழிமுறையாதெனில், மையங்களில் பணியாற்றிய செயல்களினால் கிடைத்த அனுபவங்களைப் பகிர்தல், ஒரு கேள்வி-பதில் நிகழ்ச்சி மற்றும் அது தொடர்பான வீடியோ திரையிடலாகும். மாலையில், வாழ்க்கையின் பரிமாணங்கள் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியின் மூலம், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நான்கு பரிமாணங்களில், அதாவது குடும்பம், தொழில், மிஷன் மற்றும் தனி நபர் என, எப்படி நடத்துவது என்பதை கற்றுக்கொண்டனர். இந்த கலந்துரையாடல், மாலைச் சத்சங்கத்துடன் நிறைவடைந்தது.

பில்வாராவில், 9 அக்டோபர் அன்று, ஒரு இளைஞர் கூட்டம் இரண்டு மணி நேரம் நடந்தது. அதன் தலைப்பு 'சகஜ மார்க்கம் பற்றிய சரியான புரிந்துணர்ந்தல் என்ன மற்றும் அதை இளைஞர்களிடத்தில் எவ்வாறு மேம்படுத்துவது?' என்பதாகும். கலந்து கொண்ட பத்து அப்யாசிகள், தங்களுடைய அத்தலைப்பு சம்பந்தமான கண்ணோட்டங்களை முன்வைத்தனர்.

அஜ்மீரில், 20-22ஆகஸ்டில், இளைஞர் ஒருங்கிணைப்பாளர் Dr.சன்னி, 'தன்னிலைமாற்றம்' என்ற தலைப்பில், ஒரு மூன்று நாள் பணிமுகாம் நடத்தினார். பிரிசெப்டர் Dr.விகாஷ், ஒரு குடும்ப சூழல் போன்று, இதனை எளிய முறையில் கொண்டு சென்றார். ஒவ்வொரு நாளும், சத்சங்கத்துடன் தொடங்கி சத்சங்கத்துடன் முடிவடைந்தது. அறிமுக

நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தப்பட்ட, 'மற்றவர்களிடத்தில் மற்றும் என்னிடத்திலுள்ள குறைகள் என்ன?' என்பது பற்றிய ஒரு தன்னாய்வுப் பகுதி, பிரச்சினைகள் வெளியில் இருப்பதில்லை, எப்பொழுதுமே அது தனக்குள்ளேயே இருக்கிறது என்பதைப் பங்கேற்பாளர்கள் உணர்ந்து கொள்ளச் செய்தது. மேலும் இது, முன்பு பாராட்டப்படாத அந்த நபரின், நிறைய புதிய பண்புகளை வெளிக்கொணர்ந்தது. அவர்களது இதயங்கள் திறந்து, உள்ளிருந்து தீர்வுகள் வெளிவரத் தொடங்கின. கையேடு எழுதுதல் பற்றிய ஒரு பகுதி, குறிக்கோளை அடைவது எப்படி? மற்றும் ஆன்மீக வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தல் பற்றி நடந்த கலந்துரையாடல் ஆகியவை, சாதனாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தின. இந்த பணிமுகாம், அவர்களின் சகோதர, சகோதரிகளைப் பற்றிப் புரிந்துகொள்ளவும், முக்கியமாக அவர்களைப் பற்றிப் புரிந்துகொள்ளவும் பெரிதும் உதவியது.

## பயிற்சியாளர் மேம்பாடு நிகழ்ச்சி டிப்தூர், கர்நாடகா

டிப்தூரில், 24-25 செப்டம்பர் அன்று, 'ஸ்பந்தனா'- பயிற்சியாளர் மேம்பாட்டு நிகழ்ச்சி என்ற, ஒரு இரண்டு நாள் உறைவிட பணிமுகாம், கர்நாடகா தென் மண்டலத்தின் 37 அப்யாசிகளுக்கு நடத்தப்பட்டது. அப்யாசிகளை மிஷனின் தூதர்களாக மேம்படுத்தி, அவர்களை, சகஜ மார்க்கத்தின் வேதாந்தம், மற்றும் பயிற்சி பற்றி, அதன் உண்மை தன்மை மாறாமல் எடுத்துரைக்க ஏதுவாக அமைவதற்காக, உணர்வு பூர்வமாக செயல்படச் செய்வதே பணிமுகாமின் நோக்கம் ஆகும். அந்நிகழ்ச்சியின் பகுதிகள், அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களால் நடத்தப்பட்டன. அதன் தலைப்புகள் என்னவெனில், 'பலனளிக்கும் வகையில் தொடர்புகொள்ளும் திறமை', 'தேவையான அனைத்து விவரங்களையும் உள்ளடக்கி, சகஜ மார்க்கத்தை ஆன்மீக அவா கொண்டவர்களிடம் அறிமுகப்படுத்தல்', 'சகஜ மார்க்கத்தை அதன் பல்வேறு பரிமாணங்களில் அறிமுகப்படுத்தல்' மற்றும் 'ஒரு பயிற்சியாளர் என்ற முறையில், தொடர்ச்சியாக சுய மேம்பாடடைய வேண்டியதன் அவசியம்' என்பனவாகும். பங்கேற்றவர்கள், குழுகளுக்குள்ளாகவே செய்முறை பயிற்சி பெற்றதுடன், பயிற்சியாளர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டனர். ஒரு சில பங்கேற்பாளர்கள், தங்களுக்கு முன்பே அளிக்கப்பட்ட தலைப்புகளில் கருத்துரை வழங்கியதுடன், அவர்களது வலிமைகள், மற்றும் மேம்படுத்த வேண்டிய இடங்கள் பற்றிய விமர்சனங்களையும் பெற்றுக் கொண்டனர். பங்கேற்பாளர்களுக்கு, மிஷனில் உள்ள பல்வேறு பயிற்சியாளர் வாய்ப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அவர்கள் தங்களுடைய மையங்களில் உள்ள மைய நிர்வாக அலுவலர்களிடம் கலந்து ஆய்ந்த பின்பு, பல்வேறு விதமான செயல்களை திட்டமிடும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

இந்த பணிமுகாம், சகஜ மார்க்கத்தைப் பரப்ப, தங்களுக்கு நம்பிக்கையை அளித்ததாக, இதில் கலந்து கொண்டவர்கள் உணர்ந்தனர். அநேகம் பேர், மாஸ்டரின் பணிகளில் பங்கேற்க, ஒரு புதிய உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் தங்கள் மையங்களுக்குத் திரும்பினர்.










## குழந்தைகளுக்கான பயிலரங்கம், சென்னை

அக்டோபர் 9-ம் தேதியன்று, 8-12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஒரு கைவினைப் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கிட்டத்தட்ட 90 குழந்தைகள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர். அந்தக் குழந்தைகள், தீபாவளி வாழ்த்து அட்டைகள், புகைப்படச் சட்டங்கள், சுவர்த் தொங்கல்கள், பிறந்தநாள் தொப்பிகள், வண்ணமிகு கண் கண்ணாடிகள், இன்னபிறவற்றை, பெரும்பாலும் கழிவுப் பொருளிலிருந்து செய்தனர். அவர்கள், ஒரு _- சட்டையில், ஊக்குவிக்கும் மேற்கோள்களையும், அழகான படங்களையும் வரைந்தனர். அவர்கள் சுய கற்பனையில் உதித்த, படைப்புத்திறன்மிக்க படங்களை, ஒரு பையில் வரைந்து, இயற்கையை பாதுகாப்பதற்காக, பாலிதின்களின் பயன்பாட்டைத் தவிர்ப்பது பற்றிய தகவலைக் கொண்டு சென்றனர். குழந்தைகள், கேளிக்கையில் ஈடுபட்டுக்கொண்டே நன்னெறிகளைக் கற்பதில் அகமகிழ்வுடன் இருந்தனர்.

## புதிய மையம், தமிழ்நாடு

ஆகஸ்ட் 28-ம் தேதி, திருப்பூருக்கு அருகிலுள்ள 'கருமத்தம்பட்டி'யில், ஒரு புதிய மையம் திறந்துவைக்கப்பட்டது. அந்நிகழ்ச்சி காலை தியானத்துடன் துவங்கியது. சகோ. டி. வி. விச்வநாத ராவ், தனது துவக்க உரையில், திருப்பூர் மையத்தின் மேம்பாட்டில் அப்யாசிகள் எடுத்துக்கொண்ட முயற்சியை நினைவு கூர்ந்து, அதேபோன்று, இம்மையத்தின் வளர்ச்சிக்காகவும், அப்யாசிகள் அர்ப்பணிப்புடன் உழைத்து, மேலும் பல மையங்களைத் துவங்க வழி கோலுமாறு வேண்டுகோள் விடுத்தார். ஒரு வரவேற்புக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் சகஜ மார்க்கத்தின் சிறப்பம்சங்கள் விளக்கப்பட்டன. அதன் விளைவாக, பல பங்கேற்பாளர்கள் பயிற்சியைத் துவக்க தங்களது விருப்பத்தைத் தெரிவித்தனர்.

## புதிய தியான மண்டபம், நைனிடால், உத்தரகண்ட்

செப்டம்பர் 4-ம் தேதி, நைனிடாலில், நீண்டகாலமாக கனவுகாணப்பட்டு வந்த, அவசியமாக இருந்த தியான மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. கிட்டத்தட்ட 150 அப்யாசிகள் அமரும் கொள்ளளவு கொண்ட அந்த தியான மண்டபம், ஒரு அப்யாசி சகோதரரின் வீட்டின் மேல் இருக்கிறது. அதற்கு முந்தைய தினம், குழந்தைகளுக்கான பாட்டு பாடுதல், கவிதைகள் வாசித்தல், பஜனைகள் பாடுதல், மற்றும் ஒரு உற்சாகமூட்டும் பேச்சு ஆகியன உட்பட ஒரு முழுநாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த தியான மண்டபத்தின் திறப்பு, அங்கு வசிக்கும் உள்ளூர் அப்யாசிகளிடையே மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## பண்புருவாக்கம், திருப்பூர்

ஆகஸ்ட் 14 - 15 வரை, திருப்பூரிலுள்ள, செட்டிப்பாளையம் யோகாசிரமத்தில், ஒரு சிறப்பு வேண்டுகோளுக்கிணங்க, இளம் அப்யாசிகளைக் கொண்ட ஒரு சிறிய குழுவிற்கு, சகோதரர் ரவி சுப்பையன் அவர்களால் 'பண்புருவாக்கம்' குறித்த ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

14-ம் தேதி, ஞாயிறு சத்சங்கத்திற்குப் பிறகு, ஒரு 'சுய ஆய்வு'ப் பரிசோதனையுடன் அந்நிகழ்ச்சி துவங்கியது. பயிற்சி பெறுவோரிடம், சுய அகத்தாய்விற்கு உதவும்பொருட்டு, பதிமூன்று கேள்விகள் கொடுக்கப்பட்டன. அவர்களது பண்பை வளர்த்துக் கொள்வதில், அதுவரையிலான அவர்களது முயற்சிகளைப் பற்றி எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.




அத்தலைப்பிலான மாஸ்டருடைய மேற்கோள்களும், 'ஒளியுலகிலிருந்து மென்குரல்கள்' தொகுப்பிலிருந்து, அதற்குத் தொடர்புடைய சில செய்திகளும் பகிர்ந்துகொள்ளப்பட்டன. இது, பண்பு என்பது நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பது மட்டுமின்றி, ஒரு முழுமையான சமநிலைப்பட்ட மனிதனாக ஆவதற்கான, அடிப்படைக் கோட்பாடுகளின் தொகுதியுமாக இருக்கிறது என்ற தெளிவான புரிதலைக் கொடுக்கிறது. மேலும், நமது வெளிமுக தனிமனித சிறப்பியல்பானது, மாஸ்டரால் கொடுக்கப்பட்ட உள்முக ஆன்மீக நிலையுடன் பொருந்துவதாக இருக்க வேண்டும் என்பதும் விளக்கப்பட்டது. 15-ம் தேதி, பண்புருவாக்காத்திற்கான முறைமைகள் யாவை?, மற்றும் ஒருவரை மனோதிடத்தில் தோல்வியுறச் செய்வது எது? என்பது பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அடுத்த பகுதி, சுய ஆய்வைப் பற்றியதாக இருந்தது. அனைவரும், தங்களது எதிர்மறைப் பக்கத்தை, அல்லது குறைபாடுகளை மனமுவந்து ஆய்வு செய்தனர். இது, மாஸ்டரது எதிர்பார்ப்புகளுக்கேற்ப எவ்வாறு மாறுவது என்பது பற்றிய, ஒரு கருத்துருவத்தைக் கொடுத்தது.பங்கேற்பாளர்கள் மகிழ்ச்சியுற்று, நம்பிக்கைபெற்று இந்நிகழ்ச்சியில் தாங்கள் கற்றுக்கொண்டது எதுவாயினும் அதை முயன்று பார்க்க ஆவலோடு இருந்தனர்.

# ஒளி மையம்

## மைசூர் ஆசிரமம், தென் கர்நாடகம்





மைசூர் ஆசிரமமானது, அருகில் உள்ள, நஞ்சங்கூடு, டி.நரசிபுரா, ஹுன்சூர், மாண்டியா, மடிக்கேரி மற்றும் பெரியபட்னா ஆகிய மையங்களுக்கு பிராந்திய ஆசிரமமாக இருக்கின்றது. இந்த மையங்களுக்கான அடையாள அட்டை ஒருங்கிணைப்பு, மிஷனின் வெளியீடுகளை விநியோகித்தல் போன்ற பணிகளை மைசூர் ஆசிரமம் செய்துவருகிறது. இந்த ஆசிரமமானது, பிராந்திய ஒன்று கூடுதல், பயிற்சி முகாம் மற்றும் அப்யாசி பயிற்சி நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படுகிறது.

### மாஸ்டரின் வருகைகள்

1950-களில், மைசூர் ஆசிரமம் தொடங்கப்பட்டது. 1965 டிசம்பரில், பாபூஜி மஹராஜ் வருகை புரிந்து, ஸ்ரீ.மஞ்சுநாத் ஐயர் வீட்டில் தங்கினார். மாஸ்டர், 1985 மார்ச் 16-ல் கோவிந்தராவ் கூடத்தில் நடைபெற்ற, ஸ்தாபகர் தினவிழாவை கொண்டாட, மைசூருக்கு வருகை புரிந்தார். மீண்டும், மே 17 மற்றும் 18-ம் தேதிகளில், மாஸ்டர் மைசூரில் இருந்தார். அப்பொழுது, முலகநாடு பாவனாவில், சத்சங்கம் வழங்கினார். 2002-ம் வருடத்தில், ஏறக்குறைய 16 ஏக்கர் நிலம், மைதான ஹெல்லி சாலையில், யெல்வாலாவுக்கு அருகில் வாங்கப்பட்டு, அவற்றில் 8 ஏக்கர் நிலம் ஆசிரமத்திற்காகவும், 8 ஏக்கர் நிலம் அப்யாசிகளின் வீடுகள் கட்டும் திட்டத்திற்காகவும் அளிக்கப்பட்டது. ஏப்ரல் 2, 2002 அன்று, மாஸ்டர் அந்த நிலத்தை மிஷனிற்கு சமர்ப்பணம் செய்தார். மேலும் 3 ஏக்கர் 32 குண்டாக்கள் நிலம், 2005-ம் ஆண்டு வாங்கப்பட்டது.

அதற்குப்பிறகு விரைவில், தற்காலிக தியானக்கூடம், சமையலறை கூடம் மற்றும் அலுவலக அறை கட்டப்பட்டன. பிப்ரவரி 16, 2004 அன்று, 1000 அப்யாசிகள் பங்கேற்க, அவற்றைத் திறந்து வைத்த போது, மூத்த தலைமுறையினர் மற்றும் இளைய தலைமுறையினர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, "முதியவர்களின் விவேகத்திற்காகவும், அனுபவத்திற்காகவும் நமக்கு முதியவர்கள் தேவை. இளைஞர்களின் ஆற்றலிற்காகவும், அவர்களின் உயர்ந்த லட்சியத்திற்காகவும், என்ன தேவையோ அதனை செய்வதற்கான திறனை பெற்றிருப்பதற்காகவும் நமக்கு இளைஞர்கள் தேவை. ஆனால், முதியவர்கள் சிந்தித்து பேச வேண்டும். இளைஞர்கள் நிச்சயமாக வேலை செய்ய வேண்டும்."என்று மாஸ்டர் கூறினார்.

அக்டோபர் 2004-ம் ஆண்டு, மாஸ்டர் வருகை புரிந்த அதே தருணத்தில், இளைஞர்களுக்கான கருத்தரங்கும் நடைபெற்றது. மாஸ்டர் இளைஞர்களுக்கான தன் உரையில், "பாபூஜி மகராஜ், நமக்காக முதல் சிட்டிங் வழங்குகிறார், அதனை அவர் விதைத்தல் என்கிறார். அவர், அவரையே நம்முடைய இதயத்தில் விதைக்கிறார். அதனால்தான் யோகமுறைகளில், இதயத்தை இருதயயோனி என்று அழைக்கிறார்கள். அந்த விதை துளிர்க்க, ஆரம்ப நிலையில், பக்தி, சிரத்தை மற்றும் தியானத்தை தண்ணீராக அளித்தோமானால், அது, நமக்குள்ளேயே நாம் திரும்பப் பிறக்கும் ஒரு புதிய வாழ்வின் உருவாக்கம் ஆகும்," என்று கூறினார்.

அதற்குப்பிறகு, மாஸ்டருக்காக ஒரு காட்டேஜ், தியானகூடத்திற்கு பின்புறம் கட்டப்பட்டது. மாஸ்டர், டிசம்பர் 2006-ல், குறுகிய கால வருகை புரிந்து, சில மணி நேரங்கள் ஆசிரமத்தில் தங்கிச் சென்றார்.

### இன்றைய ஆசிரமம்

இன்று மைசூரில், 500-க்கும் மேற்பட்ட அப்யாசிகள் இருக்கிறார்கள். ஞாயிறு சத்சங்கத்திற்கு, 150 அப்யாசிகள் வருகை புரிகிறார்கள். ஆயிரம் அப்யாசிகள் கலந்து கொள்ளும் அளவிற்கு தியானக்கூடம் கட்டுவதற்கான திட்டங்கள், நடைபெற்று வருகின்றன. சுற்றிலும், 500-க்கும் மேற்பட்ட பழம் தரும் மரங்களான, மாம்பழம், பப்பாளி, கொய்யா மரங்கள் நடப்பட்டுள்ளன. ஒரு காய்கறித் தோட்டம் மற்றும் ஒரு பெரிய அகலமான தோட்டம் அப்யாசிகளால் பராமரிக்கப்பட்டு வருகிறது.





